www.tamilarangam.net

# தூண்டில்



இவர்கள் இங்கே. இவர்களின் உரையாடல் அடுத்த பக்கத்தில்.

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தண்ணீர் பிடிக்கும் சிறுவர்களின் உரையாடல்.

சிறுமி – ஏன்ரா, எங்க உன்ரை அய்யா, அம்மாவைக் காணேல. நீ தண்ணி பிடிக்க வந்திருக்கிறாய்?

சிறுவன்– லெச்சனுக்கு ஒட்டுப்போட வேணுமெண்டு அய்யாவையும் அம்மாவையும் றக்கில அள்ளிக் கொண்டு போட்டாங்கள். அதுதான் சோத்துக்கு உலே வைக்க தண்ணி பிடிக்க வந்திருக்கிறன்.

சிறுமி – அப்ப நீயே சமைக்கப் போறாய்? அய்யா, அம்மா இப்ப வரமாட்டினமே?

சிறுவன்– அவை எப்பிடியும் திரும்பி நடந்து வர பொழுது பட்டிடும். அதுமட்டும் தம்பி பசி கிடக்க மாட்டான்.

? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ? ??

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்ப்பு

எதிர்பார்க்கப்பட்ட இரத்தக் களரியுடன் இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. இந்த 'ஜனநாயகத் தேர்தலுக்கு' கொடுக்கப்பட்ட விலை ஆயிரத்திற்கு மேற்பட்ட உயிர்கள். பொதுமக்களைப் பலி கொடுத்து தங்களுக்கான ஆசனங்களை ஒடுக்குமுறையாளர்கள் 'கைப்பற்றியிருக்கிறார்கள்'. 'ஜனநாயகம்' காப்பாற்றப்பட்டுவிட்டதாக உலகப் 'பார்வையாளர்களுக்கு' தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் அமைதியையும், சமாதானத்தையுமே விரும்புகிறார்கள் என்பதை இது காட்டுவதாக 'மக்கள் பிரதிநிதிகள்' பச்சையாகப் புளுகுகிறார்கள். இலங்கையில் நடைபெற்ற இத்தேர்தலினால் உண்மையிலேயே ஜனநாயகம் காப்பாற்றப்பட்டிருக்கிறதா?

அந்நிய இராணுவம் தொடர்ந்தும் நாட்டில் இருக்கக் கூடியதாக (கலைப்போம் என்ற வீரசபதம் மாகாணசபைத் தேர்தல்களின்பின் கலைந்து போய்விட்டது), தென்னிலங்கையின் பல பகுதிகளும் ஜே.வி.பியினரின் 'மிரட்டல்' கட்டுப்பாட்டுக்குள் இருக்கக் கூடியதாக, ஆயிரக் கணக்கான தமிழ், சிங்கள அப்பாவி இளைஞர்கள் விசாரணைகளின்றி தடுப்புமுகாம்களிலும், சிறைகளிலும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்க, அதீத இராணுவச் செலவீனங்களால் வறுமைக் கோட்டிற்கு கீழான மக்கள் தொகை அதிகரித்து அவர்கள் தெருவுக்கு வந்துவிட, கொலைகள் எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டிருக்க 'ஜனநாயகத் தேர்தல்' நடைபெற்றிருக்கிறது.

இந்தத் தேர்தலை நடாத்துவதற்கு ஒடுக்குமுறையாளர்கள் எந்தச் சிரமமும் படவில்லை. ஏனெனில் அவர்களுக்கு 'மட்டுமான' பாதுகாப்புத் தேவைக்கதிகமாகவே இருந்தது. இலங்கைப் பொலிஸ், இராணுவத்தைவிட அந்நிய இராணுவத்திடம் கூட தேர்தல் பிரச்சசாரங்களுக்காகப் 'பாதுகாப்பு' கேட்கப்பட்டது. இதைவிட ஒவ்வொரு பிரதிநிதிகளும் 'சொந்தமாகவே' ஆயுதபாணி மெய்ப்பாதுகாவலர்களை வைத்திருந்தார்கள். தேர்தல் பிரச்சாரங்கள் ஓட்டல்களில் மூடிய அறைகளுக்குள்ளும் நடைபெற்றன. கட்சிகளை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்பவர்களால் கொல்லப்பட்டவர்கள் ஏமாற்றப்பட்ட ஆதரவாளர்களும், பொதுமக்களுமே. ஓட்டுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்ட பிரதிநிதிகள் 'எல்லா விதத்திலுமே' தப்பிக் கொண்டார்கள். மக்கள் கொலை செய்யப்படுவதைக் கருத்தில் கொள்ளாமல், தாங்கள் தப்புவதை மட்டுமே நோக்கமாக கொண்டுள்ள இந்த மக்கள் 'தொண்டர்கள்' தான் தங்களைப் பாராளுமன்றக் கதிரைகளில் அமர்த்தும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்கள்.

தேர்தலுக்கு முன்பாக வடக்கிற்குச் சென்றிருந்த ஆங்கிலப்பத்திரிகையொன்றின் நிருபர் வயோதிபர் ஒருவரிடம் தேர்தலைப் பற்றி அபிப்பிராயம் கேட்டிருக்கிறார். சயனைட் குப்பி வாங்கி வைத்துக் கொண்டுஅப்புறமாகப் பதிலளிப்பதாக அந்த வயோதிபர் சொல்லியிருக்கிறார். இப்படியான மனநிலையில்தான் வாக்களிப்பு நடந்திருக்கிறது. வாக்குப் பதிவு அதிகாரிகளே பயந்ததால் 'அவர்களுக்கும்' ஆள் மாற்றப்பட்டு பதிவுகள் என்னப் பட்டிருக்கின்றன. தப்பாக்கிமுனையிலும் வாக்களிப்பு நடந்திருக்கிறது. குண்டுகள், கொலை மிரட்டல்களுக்கு மத்தியில் வாக்குகள் விழுந்துள்ளன. (விழுத்தப்பட்டுள்ளன). 11 வருடங்களாக இனவாதத்தைக் கக்கிவந்த ஐ.தே.க மறுபடியும் தனது வசதிகளை தேர்தல் மூலம் நீடித்துக் கொண்டுள்ளது. தொடரப்போகும் தனது ஒடுக்குமுறைக்காக அத்திவாரத்தைச் சரிபார்த்துள்ளது. இத் தேர்தலில் இவ்வளவுதான் நடந்துள்ளதா?

தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கிலுள்ளவர்கள் ஒரு 'தீர்ப்பு' வழங்கியிருக்கிறார்கள். பாராளுமன்ற ஆசனங்களுக்காக மக்களை மறந்து இனவெறி அரசுடன் இணைந்திருந்த த.வி.கூவினர் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடைந்ததும் தவிர்க்க முடியாமல் பின்வாங்கி இந்தியாவுக்குப் பறந்தனர். தற்போது தங்களது சமாதான நாடகத்தில் பங்கேற்பவர்களுக்கு பாதுகாப்பு இலவசம் என்ற சலுகையை இலங்கை, இந்திய அரசுகள் வழங்கியதும் மறுபடி நாட்டு 'ஞாபகம்' வந்து திரும்பி வந்திருந்தார்கள். பக்கம் பக்கமாக பத்திரிகைகளிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும் 'பாவமன்னிப்பை' வெகுநாகரிகமாகவே கோரினர்கள். ஒரு முதலாளி தனது பொருள் நன்றாக விற்க வேண்டுமென்பதற்காக செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போல் வாக்குகளுக்காக ஏராளமாக விளம்பரம் செய்தார்கள். செய்த(?), செய்யாத தியாகங்களையெல்லாம் பந்தி பந்தியாக எழுதிக் குவித்தார்கள். த.வி.கூவினர் மட்டுமல்ல, தென்னிலங்கைக் கட்சிகள் உட்பட தமிழர்கட்சிகள் அனைத்தும் இத் தொழிலைச் செய்யத் தவறவில்லை. தேர்தலுக்கு முன் தரும் வழக்கமான வாக்குறுதிகள் எல்லாம் தாராளமாக அள்ளி வீசப்பட்டன. இருந்தும் என்ன?

தேர்தலில் பழைய 'தமிழ்த் தலைமைகளை' தூக்கியெறிந்து மக்கள் தங்களது நிலையை வெளிக்காட்டியுள்ளார்கள். த.வி.கூ, அ.இ.த.கா. ஆகியவை ஒரு ஆசனத்தையேனும் பெறவில்லை. ஆயுதங்கள் வைத்திருந்தமையிலும், இந்திய இராணுவத்தின் ஒத்துழைப்பு இருந்தமையினாலும் ஏனையவர்கள்

www.tamilarangam.net

சில ஆசனங்களைப் 'பெற்றுக்'கொண்டார்கள். பழைய தலைமைகளை நிராகரித்தன் மூலம் 'அந்த அரசியல்' வேண்டாம்' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட இன்னொரு தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. மாகாணசபைகள் மக்களுக்காகவே என்று கூறி, 'மக்கள் நலன்' கருதியே இயங்குகிறோம் என மாகாணசபையில் பங்கெடுத்துக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், இவைகளின் கூட்டாளியான ரேலோ ஆகியவற்றிற்கெதிரான தமது எதிர்ப்பை ஈரோஸின் சுயேச்சை வேட்பாளர்களுக்கு பெருமளவில் வாக்களித்தன் மூலம் வெளிக்காட்டியுள்ளார்கள். இதன் மூலம் மாகாணசபையின் 'சேவையும்' அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் ஈரோஸின் நிலைப்பாடு சரியானதென்பல்ல. ஒன்றின் மீது மக்களுக்கிருந்த வெறுப்பு இன்னொன்றின் மீதான ஆதரவாய் மாறியிருக்கிறது.

இந்தத் 'தீர்ப்புகள்' வழங்கப்பட்டிருப்பதால் தேர்தல்தான் சரியானதும், முடிவானதுமான தீர்வு என்பதல்ல கருத்து. 'ஜனநாயக'நாடுகளில் நடக்கும் தேர்தல்கள் பற்றி அனைவரும் அறிந்ததே. அதுவும் இலங்கைத்தேர்தல்கள் 'தனிச் சிறப்பு' வாய்ந்தவை. இந்தத் தேர்தல்களிலல் அடிப்படை மாற்றங்கள் எதுவும் நிகழ்வதில்லை. அடிப்படையில் மாற்றமேற்படாவிட்டால் பிரச்சினைகளுக்கு எப்படி தீர்வு கிடைக்கும்? எனவே இந்த தேர்தல்களில் ஒடுக்குமுறையாளர்களிடையே 'ஆட்கள் மாற்றம்'தான் நடைபெறுகிறது. உழைப்பவர்கள் தமது உழைப்பை பறிகொடுப்பது தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. சுரண்டுபவர்கள் சுரண்டிக் கொழுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந் நிலையை மாற்ற இந்தத் தேர்தல்களில் நிச்சயமாக முடியாது. வாக்குளால் மட்டுமே சரியான தலைமையை ஏற்படுத்த முடியாது. உழைப்பவர்களும், அவர்களின் நேச சக்திகளும் ஆயுதமேந்திப் போராடி, சுரண்டல்காரர்களிடமும், ஒடுக்குமுறையாளர்களிடமும் இருக்கும் அதிகாரத்தைப் பறித்தெடுப்பதால் மட்டுமே ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இதற்காக நாங்கள் அரசியல் மயமாவோம். உண்மையான விடுதலையை, சுதந்திரத்தை, விடிவை அடைவதற்கான சரியான வழிவகைகளை தெரிந்து கொள்வோம். மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவோம். இவற்றைச் செய்யத் தவறுவோமாயின் இப்படியான தேர்தல்களையே மக்கள் நம்புவார்கள். அவர்கள் அப்படி நம்புவதிலும் தவறுசொல்ல முடியாமல் போய் விடும். எனவே இந்த 'ஜனநாயகத் தேர்தல்களின்' ஏமாற்றை அம்பலப்படுத்துவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐ.தே.க, சு.க என்பன வடக்கு, கிழக்கில் தீவிர தேர்தல் பிரச்சாரம்.

— பத்திரிகைச் செய்தி.



www.tamilarangam.net

# வியர்வையின் விருப்பம்

... சிவம்

துன்பம் கடிக்கும்
முதுகில் - அதை
வியர்வை பிறந்து
கொல்லும்.

வெற்றிக்களிப்பில் வியர்வை
விழுந்து மகிழும்
சால்வை
கோபுரமாய் எம் தலையில்.
அதுவும்
அவன் வந்தால்
கக்கத்தில் சுருண்டு படுக்கும்.

சுரண்டியதில் மிச்சம்
ஒரு துண்டாய்
எம்
அரையில்.

எங்கள் குடிசைகளில்
சூரிய ஒளியும் விழுந்துவிடாமல்
தடுக்கும் அந்த
உயர்ந்த வீடுகள்.

ஒவ்வொருநாளும்
எரியமுடியாமல்
நனைந்து போகும்
எம்
அடுப்பங்கரை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரை அழிந்து
கண்ணீரில் மூழ்கிவிடும்
வீடுகள்.

கரைந்து போகும்
எம்
கனவுகள்.

உயிர் உருக்கியும்
உதிரம் கருக்கியும்
வளைந்து முடியாமல்
எங்கள்
வாழ்க்கைப் பானை.

இப்போதும் அவன்
இட்டாற்தான்
சோறு பொங்கும்.

உழைப்பவர் நாங்கள்
உண்பதற்கில்லை.

வறுமைக்கோட்டில்
தொங்கிலும்
வலுவான வர்க்கப்பிணைப்பு
எங்களுக்குள்.

வியர்வையிற் தோயாமல்
வெளுக்காது
சமூக விஞ்ஞானம்.

என்னடா
எமது அன்புக்குரிய
சமூக விஞ்ஞானவாதிகளே
இனியேனும் வாருங்களேன்
எங்களுக்குள்.

இசங்களுக்குள்
நிசங்களை
தவறியேனும்
புதைத்துவிடாமல்
கொட்டி முழக்குவோம்
இந்த
இருண்ட வானம்
கிழிந்துபோய்
புதிய சூரியன்
புலரும்வரை.

www.tamilarangam.net

சிறுகதை

# அத்திவாரமில்லாத கட்டிடங்கள்

... துளசி

"வினோத், மஞ்சுளா அன்ரியிட்டப் போய் கசற் வாங்கிக்கொண்டு வா" என்று சொன்ன சாவித்திரி குமுதம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

"எனக்குத் தெரியாது. நீங்க போய் வாங்குங்கோ" பாடசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த வீட்டு வேலையில் கவனமாயிருந்த வினோத் பதிலளித்துவிட்டு தனதுவேலையில் மூழ்கினான்.

"உங்க என்ன போட்டுக் கிளறிக் கொண்டிருக்கிறாய்? கசற்ற வாங்கித் தந்திட்டு பிறகு என்னண்டாலும் செய்"

"நான் மாட்டன். வீட்டு வேல செய்து முடிக்காட்டி நாளைக்கு ரீச்சர் பேசுவா"

"பெரிய எஞ்சினியர் படிப்புத்தானே படிக்கிறாய். நாள் முழுக்க விளையாடு. நான் ஏதேன் அலுவல் சொன்னாத்தான் உனக்குப் படிப்பு ஞாபகம் வருகுது" சாவித்திரி எரிச்சலோடு குமுதத்தை மூடினாள்.

நாள் முழுக்க தான் விளையாடவில்லையென்று வினோத்துக்குத் தெரியும். அதனால் பதில் சொல்லாது எதையோ அழித்து எழுதினான்.

"பார் காது கேக்காத மாதிரி இருக்கிறதை. இப்ப நீகசற் வேண்டியராட்டி என்னட்டை ஒரு அலுவலுக்கும் வரப்படாது" குறிப்பிட்ட நேரத்திற்குள் எடுக்காவிட்டால் கசற் கைமாறிவிடும் என்ற பயத்தில் சாவித்திரிக்குச் சின்னதாகக் கோபம் வந்தது.

கடைசி எச்சரிக்கை வினோத்தைப் பயமுறுத்தவே செய்தது. 'இந்த அம்மாவோட பெரிய கரைச்சல். படிக்க விடாம சும்மா கலைச்சுக் கொண்டிருக்கிறா. படம் பாக்கிறது அவா. கசற் வேண்டியரப் பஞ்சி' வினோத் தனக்குள் கோபித்துக் கொண்டே, கதவைத் திறந்து படிகளில் ஏறினான். அதே கட்டிடத்தின் மூன்றாவது மாடியில்தான் மஞ்சுளாவின் இருப்பிடம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நல்ல ஸ்ரோறியான படம்" என்றபடி மஞ்சுளா அன்ரி கசற்றைத் தர, விஜேத் படியிறங்கினன்.

"அச்சாப் பிள்ளே.சரி நீ போய்ப் படி" சாவித்திரி மனமாறப் பாராட்டிவிட்டு கசற்றை வாங்கி வீடியோவில் சுழல வைத்தாள்.

தனது மேசைக்கு வந்த விஜேத் இடையில் தடைப்பட்ட படிப்பைமறுபடி தொடர்ந்தான்.

அவனுக்கு படிப்பில் மிகவும் ஆர்வம்.அவனுடைய வகுப்பில் அவன்தான் ஒரே ஒரு வெளிநாட்டு மாணவன்.ஆசிரியர்கள் அவனுடைய திறமையைப் பகிரங்கமாக மெச்சியிருக்கிறார்கள்.விஜேத்துக்கு அது பிடிக்கும்.சக மாணவர்கள் கூட அவ்வப்போது வியப்பதுண்டு.

"அண்ணே தாங்கண்ணே"

"தரமாட்டேன் போடா." டிசும்.

"அண்ணே அவன் கேக்கிறானில்ல.குடுத்திடுங்க"

"இவன் யாரிறு புதுசா"

"நா உங்க மச்சி.அவனுட்ட குடுத்திடுங்க"

"மச்சி சொல்ருர்றில்ல.குடுத்திடுவோம்"

டிசும். டிசும். டிசும்.

ஆ. அம்மா. ஐயோ.

சத்தம் இடையூறு செய்ய விஜேத்தால் படிக்க முடியவில்லே. "அம்மா சத்தைக் குறையுங்கோ" என்ருன்.சத்தம் குறையவில்லே.

சினந்தபடி கதவைத் திறந்து கொண்டு கூடத்திற்கு வந்தான். ரி.வி.யிற்குள் ஆயுதம் வைத்திருந்த நாலேந்து பேருக்கு மேலால் கதாநாயகன் இறக்கையில்லாமல் பறந்து கொண்டிருந்தான்.ஓடிப் பாடத் தயாராயிருக்கும் கதாநாயகி சண்டையை ரசிப்பதை அவ்வப்போது காட்டினர்கள்.

"சத்தத்தைக் குறைச்சுப் போட்டுப் பாருங்கோவன்"விஜேத் அம்மாவுக்குப் பக்கத்தில் வந்து நின்று சொன்னன்.

"கதவைச் சாத்திப் போட்டுப் படி" சாவித்திரி படத்தில் முழுமையாக லயித்திருந்தாள்.

"முடியுதில்லை கேக்குது"

"அப்ப படத்தைப் பாத்திட்டுப் பிறகு படி"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விநோத்துக்கு ஆத்திரம் வந்தாலும் எதுவும் செய்ய முடியாமல் செற்றியொன்றில் சாய்ந்து உட்கார்ந்து படத்தைப் பார்த்தான். நகைச் சுவைக் காட்சிகள் அவனுக்குப் பிடித்தவை. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ரசித்துப் பார்த்தான்.

படம் முடிந்ததும் அவனே கசற்றைக் கொண்டு போய் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்தபோது ரி.வி.யில் சாகசக்காட்சிகள் நிறைந்த தொடர்படம் ஆரம்பமாகியிருந்தது. விநோத் மறுபடி அங்கேயே உட்கார்ந்துவிட்டான். வீட்டு வேலை பற்றி அவனுக்கு மறந்து விட்டது. சாவித்திரியும் ஞாபகப்படுத்தவில்லை.

மறுநாள் பாடசாலையில் ஆசிரியை அவனைக் கடிந்துகொண்டபோது விநோத்துக்கு அவமானமாக இருந்தது. ஆத்திரம் முழுவதும் அம்மா மேல் திரும்பியது. 'உப்பிடி படிக்க விடாம படம் போட்டுக் குழப்புறதெண்டா பிறகேன் என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவான்'

விநோத்துக்கு இந்த நாடே பிடிக்கவில்லை. இங்கிருப்பவர்களை விட பல வகைகளில் தாங்கள் வித்தியாசம் என்பதை அவன் அறிந்திருந்தான். இந்த வித்தியாசங்கள் அவனுக்கொரு தாழ்வாகவே இருந்தது. எப்போதோ பார்த்துப் பழகிய கறுப்பு முகங்களும், உருண்டு விளையாடிய புழுதி மண்ணும், குத்தி உப்புப் போட்டுத் தின்ற பச்சை மாங்காயும் மங்கலான ஞாபகங்களாக இருந்தன. அவை நிஜமா அல்லது இப்போதிருக்கும் நிலைதான் நிரந்தரமா என்று அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்கான எந்த சாத்தியமும் அவனுக்கில்லை.

தாய்நாட்டில் பிறந்து, வழமையான சிறுவர் பிராயத்தை அநுபவித்துக் கொண்டிருந்தவன் அந்த சந்தோசங்களிலிருந்து கட்டாயமாகப் பிரித்தெடுக்கப்பட்டு அந்நிய தேசத்திற்கு இழுத்து வரப்பட்டிருக்கிறான். மற்றவர்களைப் பொறுத்தவரை விசயம் இவ்வளவுதான்.

ஆனால் விநோத்துக்கோ இழந்தவைகள் ஏராளம். தாய்மொழி, உற்ற நண்பர்கள், உறவினர்கள், சுதந்திரம் என்று நீளமான பட்டியலையே அவன் இழந்திருந்தான். பலாத்காரமாக அந்நிய இடத்தில் இறக்கி விடப்பட்டிருக்கிறான். இதற்கு தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியது அவனுக்குள்ள கட்டாயம்.

விநோத்துக்கு எதுவுமே பிடிக்கவில்லை. வீட்டில் அவனோடு விளையாட யாருமேயில்லை. தனியாக அவன் விளையாடுவதற்கு கூட வீட்டில் எந்தப் பிரதேசமும் அவனுக்கில்லை.

"உனக்கெத்தினை தரம் சொல்லுறது? தடக்குப்பட்டு விழுற

www.tamilarangam.net

மாதிரி சாமானுகளை எல்லா இடமும் பரப்பி வையாதையெண்டு"

"காப்பெற்றை பழுதாக்காதை.வர வர உன்ரை குளப்படி கூடிக்கொண்டு வருகுது"

"மாடு சுவரில என்ன ஒட்டி வைச்சிருக்கிறாய்?"

பேச்சும், ஏச்சும்.அவன் எதைச் செய்தாலும் தண்டனை அல்லது கண்டனம்.சின்ன சதுர அடிக்குள் இருந்து ரி.வி.பார்த்துக் கொண்டும் 'சிலோன் சமையலை' சுவாசித்துக் கொண்டும் மட்டும்தானும் இருக்க வேண்டும்.அப்போதுதான் அவன் 'நல்ல பிள்ளை'.

வீட்டில்தான் இப்படியென்றால் பாடசாலையில் கூட விநோத்தால் சந்தோசத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.தன்னுடைய கறுப்பு நிறத்தால் அவன் தானுகவே கொஞ்சம் ஒதுங்கினுன்.சேர்ந்த ஆரம்பத்தில் பெரிய ஆச்சரியங்களுடன் அவனோடு பழகிய சக மாணவர்கள் பின்னர் அவனில் அதிக அக்கறை காட்டவில்லை.தாங்களே கதைத்துச் சிரித்தார்கள்.தாங்களே விளையாடினூர்கள்.

எப்போதாவது பிள்ளைகள் உள்ள தமிழ்க் குடும்பம் விருந்தாளிகளாக தங்கள் வீட்டுக்கு வரும்போதுதான் விநோத்துக்கு ஒரளவு சந்தோசம் ஏற்படும்.அந்தப் பிள்ளைகளுடன் தாய் மொழியில் கதைத்து,கொஞ்சமாக விளையாடி .... அந்தச் சந்தோசம் சுமார் ஒரு வாரம்வரை அவனுடைய சேமிப்பில் இருக்கும். பிறகு பழையபடி ...

பாடசாலை முடிந்து வெளியே வந்தபோது தோமசும்,மார்க்கோசும் என்னவோ வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். விநோத் அவர்களை நெருங்கி சிநேகமாகச் சிரித்தான்.

"எங்களோடு விளையாட வருகிறாயா?"

"அதற்கென்ன"

மூவரும் பாடசாலைக்கு அருகிலிருந்த புல்வெளிக்குப் போனூர்கள்.அங்கே வேறு சிலர் ஏற்கெனவே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

கொஞ்சப் பேர் சின்னச் சைக்கிளில் ஓடி வித்தை காட்ட, சிலர் மணலுக்குள் அளைய,பந்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.விநோத் தோமஸ்,மார்க்கோஸ் ஆகியோரும் இணைந்து கொண்டனர்.


பிற்பகல் குளிர்.கருமேகங்கள் மழையை எப்போது பெய்வதென தீர்மானித்திருக்கவில்லை.பட்சிகளை ஆகாயத்தில் காணேம்.

பந்தை எடுக்க ஓடி வந்த விநோத் தவிர்க்க முடியாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்க்கோசின் காலை மிதித்துவிட்டான். யாரும் எதிர்பார்க்காத விதமா மார்க்கோஸ் வினோத்தை அடித்துவிட்டான்.

"கறுப்பன்"

வினோத்துக்கு அடியுடன் அவன் பின்னர் சொன்னதும் சேர்ந்து வலித்தது. கண்கள் திரையிட, கன்னத்தைத் தடவியபடி புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டான்.

யாரும் அவனுக்கு ஆதரவாகக் கதைக்கவுமில்லை. நடந்ததை விசாரிக்கவுமில்லை. கொஞ்ச நேரம் மௌனமாக நின்றுவிட்டு மறுபடி தங்கள் விளையாட்டுகளைத் தொடர்ந்தார்கள்.

"உன்னுடைய நாட்டுக்குத் திரும்பிப் போ"

பின்னால் மார்க்கோஸ் கத்துவது வினோத்துக்குக் கேட்டது. கண்ணீர்த் துளியொன்று வலிக்கும் கன்னத்தை தடவி விழுந்தது.

"எந்த நாடு?"

'நான் எங்க போக வேணும்?'

'நான் ஏன் இங்க இருக்க வேணும்?'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'என்னோட படிக்கிற எல்லாரும் வெள்ளையாயிருக்க நான் மட்டுமேன் கறுப்பாயிருக்க வேணும்?'

'நான் கதைக்கிற பாசை மட்டும் ஏன் வேறயாயிருக்க வேணும்?'

'ஏன் என்னோட ஒருத்தரும் வடிவா பழகியினமில்லே?'

'ஏன் மார்க்கோஸ் அடிச்சவன்?'

எந்த ஒரு கேள்விக்கும் விநோத்தால் விடை தெரிந்துகொள்ள முடியவில்லை. தன்னை எல்லோரும் விரட்டுவது போலவும், கேலி செய்வது போலவுமான உணர்வு அவனை வருத்தியது.

அந்தச் சிறுவனுக்கு தான் அகப்பட்டிருக்கும் சின்ன வட்டம்தான் தெரிகிறது. மற்றவர்களும் பெரிய வட்டத்திற்குள்தான் அகப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவன் தெரிந்து கொள்ளவில்லை.

அவனுக்குத் தேவை நண்பர்கள் நண்பர்கள், விளையாட்டு, மகிழ்ச்சி. அவற்றை எதிர்பார்ப்பது அவன் தவறல்ல. சிறுவர்களின் வழமையான எதிர்பார்ப்பு, ஏக்கம். அவற்றைப் பூர்த்தி செய்ய சாதாரணமாக சந்தர்ப்பங்கள் தாராளம். இவைகள்தான் நாளைய சமுதாய உறுப்பினர்களைத் தயார் செய்கின்றன. அவர்களின் உள விருத்திக்கு அத்திவாரமிடுகின்றன.

விநோத்துக்கு இந்த அத்திவாரமே இல்லாமல் போய்விட்டது. அவனுக்கொன்றுமில்லை, அவனுக்கென்றும் ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் யாரொ தீர்மானிக்கிறார்கள். யாரோ செய்கிறார்கள்.

விநோத்துக்கு அழுகை மாறி ஆத்திரம் வந்தது. 'எல்லாரும் என்னில விளையாடியினம்'

வீட்டுக்கு வந்ததும் புத்தகப் பையை சுழட்டி வீசினான். சப்பாத்தை மட்டும் கழற்றிவிட்டு அப்படியே செற்றியில் விழுந்து படுத்தான்.

"என்ன பசிக்கேலயே? கால், கை கழுவிக் கொண்டு சாப்பிட வா" சாவித்திரி சொல்லிவிட்டு குமுதத்தின் அரசு கேள்வி பதிலில் நடிகைகளின் உதடு ஒப்பீடுதலை படித்துக் கொண்டிருந்தாள்.

"எனக்கு அடிச்சுப் போட்டாங்கள்" என்றான் விநோத்.

"ஆர் அடிச்சது"

"மார்க்கோஸ்"

"நீயேன் அவங்களோட சேட்டை விடுறாய். உன்ரைபாட்டில இரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்தா அவங்களேன் உனக்கு அடிக்கிறாங்கள்" சாவித்திரி அடுத்த பக்கத்தை புரட்டினாள்.

"நாங்கள் எங்கட நாட்டுக்குப் போவம்"

"வாயை மூடிக் கொண்டு முகம், கை, கால் கழுவிப் போட்டு போய்ச் சாய்ப்பிடு"

வினோத் எதுவும் சொல்லாமல் கண்ணை மூடிக் கொண்டு அப்படியே இருந்தான். யாரும் அவனை லட்சியம் செய்யவில்லை. அவனில் அக்கறை காட்டவில்லை. அவனைப் புரிந்து கொள்ளவுமில்லை. சுலபமாகப் புறக்கணித்து விட்டார்கள்.

வினோத்துக்கு மார்க்கோஸ் சொன்னது மறக்கவில்லை. "கறுப்பனே உனது நாட்டுக்குப் போ"

பகல் வேலை முடிந்து சந்திரன் வீட்டுக்கு வந்தான். மாலை ஐந்து மணிக்கே இனி அவனது வேலை தொடரும்.

" .... ஸ்ரட்டில இமிக்கிறேசன் குடுக்கிறாங்களாம்" என்று சாவித்திரி ஆரம்பித்தாள்.

"சளம் சும்மா கதைக்கும். நானும் எத்தினை இடத்தை விசாரிச்சனான்" சந்திரன் தொலைக்காட்சிக்கு ஒளி கொடுத்தான்.

"மங்களாதான் சொன்னவா. அவையின்ரை சொந்தக்காறப் பெடியன் ஒண்டுக்கு கிடைச்சிட்டுதாம்"

"நாளைக்கு லோயரிட்ட போய் கேட்டுப் பாப்பம்"

"ட்ரை பண்ணு கட்டாயம் கிடைக்கும். உங்க வேலை செய்யாதவைக்கெல்லாம் கிடைச்சிருக்கு"

"சரி பாப்பம். உதென்ன கசற்"

"நல்ல படம். நான் அப்போத பாத்திட்டன். எண்டாலும் இன்னொருக்கா பாக்கலாம்"

சந்திரன் தான் பார்ப்பதற்காக கசற்றைச் செருகி ஓட விட்டான். ரசித்தவற்றை மறுபடி ரசிப்பதற்காக சாவித்திரி அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

வினோத் களைத்து தூங்கிப் போயிருந்தான். கனவில் மார்க்கோஸ் வந்து "கறுப்பனே உனது நாட்டுக்குப் போ" என்று காலால் உதைந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கரை நாடாப் பயணங்கள்

... ராகவன்

பஸ் ஒளியில்
காய்ந்த பச்சை
தலைக்காட்ட
பின் மறையும்
மரஞ்செடிகள்.
பக்கத்தே —
மண் இறுகி,
வெறுமையாய்
இருள் போர்த்த
வயல்வெளிகள்.

மேலே —
நட்சத்திரங்களாய்
பூக்காத வானம்.
இன்னும்
கரிய முகில் கிழித்து
வெளிவரா நிலவு.

எங்கோ தொலைவில் —
பிரிந்துவிட்ட
துணை நினைத்து
குரல் எழுப்பும்
குயில் ஒன்று.

உள்ளே
யாவரும் உறங்க
நானோ விழித்திருய்பேன்
ஆயிரம் நினைவுகளை
உள்வாங்கி —
ஈரித்த கண்களும்
இதயமுமாய்.

காய்ந்தவற்ற இரவுகள்
நெகிழ்ந்துருக்க,
கரைநாடாப் பயணங்கள்
எத்தனை நாட்களுக்கு
இன்னும் தொடரும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




16.01.89 (வீரகேசரி)

பூநகரிப் பகுதியில் புலிகள் இயக்கத்தினருக்கும், ஈ.என்.டி.எல்.எவ் இயக்கத்தக்குமிடையிலான மோதலில் இருவர் கொல்லப்பட்டனர். பண்டத்தரிப்பில் நடைபெற்ற மோதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

17.01.89 (வீரகேசரி)

கல்முனையில் தொடர்ச்சியான அடைமழையால் பாதிக்கப்பட்டு 2,000 பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர். அறுவடைக்குத் தயாராகிவிட்ட நெல் வேளாண்மைகள் நீரில் மூழ்கியுள்ளன.

18.01.89 (வீரகேசரி)

வவுனியாவில் 3 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து மாறம்பைக்குளம் பகுதியில் 13 தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

19.01.89 (வீரகேசரி)

அகுங்கலையில் ரயில் – பஸ் விபத்தில் 50 பிரயாணிகள் கொல்லப்பட்டனர்.

களத்தில் இருந்த போராளிகளுக்கும், தலைமைத்துவத்தை தழுவியிருந்தவர்களுக்கும் இடையில் முரண்பாடு வளர்ந்து, போராளிகளும், ஆதரவாளர்களும் இயக்கத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டதாலேயே ஈரோஸ் இயக்கத்திலிருந்து பிரிந்து சுயேச்சையாக தேர்தலில் போட்டியிடுவதாக வி.குமாரவடிவேல் தெரிவித்தார்.

20.01.89 (வீரகேசரி)

கல்முனைப் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

மாறம்பைக் குளத்தில் இலங்கை இராணுவத்தினரால் 9 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

21.01.89 (வீரகேசரி)

மாத்தறையில் தந்தை, மகள் உட்பட மூவர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

23.01.89 (வீரகேசரி)

முன்னாள் யாழ்.உபவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் காலமானார்.

யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத்தினரின் தேடுதலின்போது வீரசிங்கம் என்றவிடுதலைப்புலி உறுப்பினர் கொல்லப்பட்டார்.

24.01.89 (வீரகேசரி)

வெள்ளாவளிப் பிரதேசத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தைச் சேர்ந்த கஜுவாஞ்சிக்குடிப் பிரதேசப் பொறுப்பாளர் ஆனந்தன், மண்டூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் சுமணன் ஆகியோர் போட்டி இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாண்டிருப்பில் சிவஞானம், செல்வராசா ஆகிய குடும்பஸ்தர்கள் ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டனர்.

26.01.89 (வீரகேசரி)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் யாழ் மாவட்ட வேட்பாளர் ஏ.ரி.சிவஞானம் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

27.01.89 (வீரகேசரி)

நாடு முழுவதிலும் 24 மணி நேரத்திற்குள் 40க்கும் அதிகமான கொலைகள் இடம்பெற்றுள்ளன.

27.01.89 (தி ஐலண்ட்)

யாழ்நகரில் புலிகள் 3 மணித்தியாலங்களுக்கும் மேல் இந்திய இராணுவத்துடன் மோதினர்.இதனால் நகர் பரபரப்படைந்தது.பலர் வீடுகளை விட்டு வெளியேறினர்.கடைகள் பூட்டப்பட்டன.பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

யாழ் இந்துக் கல்லூரிக்கு எதிராக புலிகளும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் மோதிக் கொண்டதில் ஒரு ஆசிரியர் கொல்லப்பட்டார்.இரண்டு பெண் ஆசிரியர்கள் காயமடைந்தனர்.

28.01.89 (வீரகேசரி)

தென்னிலங்கையில் மாணவ, மாணவிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதில் இடம்பெற்றோர் கொலை செய்யப்பட்டு வருகின்றனர்.வீடுகளிலிருந்து பலவந்தமாக அழைத்துச் செல்லப்படும் மாணவர்கள் பின்னர் திரும்புவதில்லையென தேசிய மாணவர் நிலைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

29.01.89 (சண்டே ரைம்ஸ்)
01.01.89 - 26.01.89 வரை 584 பேர் நாடு முழுவதிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

30.01.89 (வீரகேசரி)

தெற்கில் கிராமோதயத் தலைவர், தபாற் சேவகர், ஐ.தே.க ஆதரவாளர் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கோப்பாயில் தேடுதல் வேட்டையின்போது வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறையில் ஆசை என்பவரும், எழுவைதீவில் றொபேட் குமாராஜா என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

31.01.89 (வீரகேசரி)

மூதூரில் மல்லிகைத்தீவு அகதிகள் முகாமிலிருந்த எம்.கந்தராசா என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்திய இராணுவத்தால் உமாசங்கர் என்ற யாழ் பல்கலைக்கழக மாணவர்சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பகிஸ்கரிப்பு செய்தனர். இதனைக் கலைப்பதற்காக இந்திய இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் என்.ஜெகநாதன், ரி.சத்தியேந்திரா என்ற இரு மாணவர்கள் கொல்லப்பட்டனர். 8 பேர் காயமடைந்தனர்.

02.02.89 (டெய்லி நியூஸ்)

இந்திய இராணுவத்துடன் தொடர்பு வைத்திருந்தமைக்காக 17 வயதுப் பெண் ஒருவர் துணுக்காயில் புலிகளால் கொல்லப்பட்டார்.

03.02.89 (தி ஐலண்ட்)

கோண்டாவில் பிரதான பஸ் நிலையத்தில் இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர்.

வட்டுக்கோட்டையில் புலி உறுப்பினர் ஒருவர் போட்டிக்குழுக்களால் கொலை செய்யப்பட்டார்.

04.02.89 (வீரகேசரி)

கிழக்கு மாகாணத்தில் உள்ள விவசாயக் கிராமமொன்றில் 11 சிங்கள மக்களை தமிழ் இயக்கமொன்று கொலை செய்துள்ளது.

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியரும், பல்கலைக்கழக மாணவர்களும் படுகொலைசெய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்மாநகர பாடசாலை மாணவர்கள் பகிஸ்கரிப்பு செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வித்தியானந்தன் என்ற புலி இயக்கத்தவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

29.01.89 (வீரகேசரி)

வந்தாறுமூலை, செங்கலடி, வாழைச்சேனை ஆகிய இடங்களிலுள்ள ஈரோஸ் அலுவலகங்கள் உடைக்கப்பட்டன.

06.02.89 (வீரகேசரி)
அச்சுவேலியில் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அக்கராயன்குளப் பகுதியில் மோதல்கள் நடைபெறுவதன் காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

07.02.89 (வீரகேசரி)

கண்டிப் பகுதியில் இ.போ.ச அதிகாரிகள் இருவர் உட்படநால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவருக்கு அஞ்சலி தெரிவிக்கு முகமாக மட்டு பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு செய்தனர்.

09.02.89 (வீரகேசரி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமான இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு மத்தியஸ்த உதவிபுரியுமாறு தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம் முதற்தடவையாக ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

11.02.89 (வீரகேசரி)

கண்டிப் பகுதியில் ஒரே இரவில் ஐவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

12.02.89 (வீரகேசரி)

கட்டைப்பறிச்சானிலுள்ளவர்கள் கொதிக்கும் வெயிலில் நிற்க வைக்கப்படுகிறார்கள். ஆண்கள் அழைத்துச் செல்லப்பட்டு காடுகளையும், பற்றைகளையும் வெட்டித் துப்பரவு செய்யும் வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மதவாச்சி, றம்பாவை, வெலியாச் சந்தியில் நான்கு இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

13.02.89 (வீரகேசரி)

கொரவப்பொத்தானைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த துட்டுவேவ கிராமவாசிகள் 34பேர் ஆயுதபாணிகளால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர். 16வீடுகள் எரிக்கப்பட்டன. கொலை செய்யப்பட்டவர்களில் 20 குழந்தைகள், 5 பெண்கள் அடங்குவர்.

மாத்தளைப் பகுதியில் நால்வர் கொலைசெய்யப்பட்டனர்.

www.tamilarangam.net

யாழ் தீவுப் பகுதியில் மலேரியா நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. புங்குடு தீவு, வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் இந் நோயால் பீடிக்கப்படுவோர்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

15.02.89 (வீரகேசரி)

பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படியும், 13.02.89 முதல் 16.02.89 வரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியா கச்சேரி மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முதற்தடவையாக ஜே.வி.பி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

நீர்கொழும்பில் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த வாரத்தில் 3 தினங்களில் மட்டும் 125 கொலைகள் இடம்பெற்றுள்ளன.

14.02.89 (வீரகேசரி)

கண்டிப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 4 சடலங்கள் காணப்பட்டன.

வெலிமடையில் சிவராம் சுப்பையா என்பவரும், அவரது 10 வயது மகளும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

16.02.89 (வீரகேசரி)

மன்னாரைச் சேர்ந்த கூட்டணிக்கட்சியின் ஆதரவாளரான ஞானப்பிரகாசம் மொறுயஸ் என்ற ஆசிரியர் சுட்டுக் கொல்லப்பட்டு மின்கம்பத்தில் கட்டப்பட்டார்.

ஆயுதமேந்தியவர்கள் மக்களை அழைத்துவந்து வாக்களிக்கச் செய்வதாக ஈரோஸ் தலைவர் சர்வதேச தேர்தல் அவதானிப்பு பிரதானிகளிடம் புகார் செய்தார்.

இந்திய இராணுவத்தின் ரோந்து நடவடிக்கையின்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தரான வில்லியம் சயனைட் அருந்தி மரணமானார். புல்மோட்டையில் ஜெயவீரசிங்கம், தர்மலிங்கம் என்ற இருவர் சரணடைந்தனர்.

17.02.89 (வீரகேசரி)

பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க பெரும்பான்மையாக வெற்றியடைந்தது. யாழ் மாவட்டத்தில் முதலாவது சுயேட்சைக்குழு மிகக் கூடுதலான வாக்கு வித்தியாசத்தில் முதலிடம் வகிக்கிறது. குமார் பொன்னம்பலம், சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம், யோகேஸ்வரன் ஆகியோர் தோல்வியடைந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட தேவநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோர் தோல்வியடைந்தனர். நுவரெலியா மாவட்டத்தில் ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட்ட இ.தொ.க உறுப்பினர்கள் தோல்வியடைந்தனர். ஐ.தே.க சார்பில் கொழும்பில் போட்டியிட்ட இராசதுரை தோல்வியடைந்தார்.

www.tamilarangam.net

# இறுதியான முடிவுகள்

| | மாவட்ட ரீதியில் தெரிவானோர் | | தேசிய ரீதியில் தெரிவானோர் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஐ.தே.க. | - 110 | - | 15 | - | 125 |
| ஸ்ரீ.ல. | - 58 | - | 9 | - | 67 |
| த.வி.கூ. | - 9 | - | 1 | - | 10 |
| சுயேச்சை (யாழ்) | - 8 | - | 1 | - | 9 |
| மு.கா. | - 3 | - | 1 | - | 4 |
| ஐ.சோ.மு. | - 2 | - | 1 | - | 3 |
| ம.ஐ.மு. | - 2 | - | 1 | - | 3 |
| சுயே. திருமலை | - 2 | - | 0 | - | 2 |
| சுயே. வன்னி | - 1 | - | 0 | - | 1 |
| சுயே.மட்டு (1) | - 1 | - | 0 | - | 1 |

---

# உலகச் செய்திகள்

தொகுப்பு : க.பூபாலச்சந்திரன்

வெனிசுலாவில் விலைவாசிகள் அதிகரிக்கப்பட்டதை கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் செய்கின்றனர். இவர்களை அடக்குமுகமாக அரசபடைகளால் நூறுபேர்வரை கொல்லப்பட்டுள்ளனர். கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

கிழக்கு ஜேர்மனியில் 18 வயதிற்கு மேற்பட்ட வெளிநாட்டவர் 6 மாதத்திற்கு மேல் வசித்திருந்தால் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படும்.

25 வருடங்களின்பின் சீனா, இந்தோனேசியா என்பன இராஜரிக உறவை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளன.

அமெரிக்க விமானம் ஒன்று 350 பயணிகளுடன் கவாயிலிருந்து நியூசிலாந்திற்கு 20,000 அடி உயரத்தில் பறக்கும்பொழுது நடுப்பகுதி வெடித்து 10பேர்வரை மாண்டனர். விமானம் திரும்பவும் கவாயில் இறக்கப்பட்டது. இது யாப்பானிய சிவப்பு இராணுவத்தின் செயல் என நம்பப்படுகிறது.

மத்திய அமெரிக்காவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் புகும் அக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகள் ஒரு சில மனித்தியாலங்களுக்குள் விசாரணை செய்யப்பட்டு, தகுதி அற்றவர்கள் எனத் தெரிந்தால் உடனடியாக நாடுகடத்தப்படுவர் அல்லது காவல்முகாமிற்கு அனுப்பப்படுவர் என புதிய சட்டம் அமெரிக்காவில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

செக்கோஸ்லாவியாவில் மனி உரிமைச் சங்க அங்கத்தவருக்கு 9 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்ததாக மேலும் 50 பேருக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேற்கு ஜேர்மனியின் நூறன்பேர்க் நகரத்தில் குடிபெயர்ந்த அகதிகள் தங்கியிருந்த விடுதிக்குள் குண்டு வைக்கப்பட்டுள்ளதெனக் கிடைத்த மிரட்டலையடுத்து அங்கிருந்தோர் அவசரமாகப் பாடசாலையொன்றிற்கு இடம் மாற்றப்பட்டனர்.

மேற்கு ஜேர்மனியில் 550க்கும் மேற்பட்ட சிறுவர்கள் அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பித்துள்ளனர். இதில் பெரும்பாலானோர் இந்திய இராணுவத்தின் துன்புறுத்தல்களால் தப்பி வந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப் பிள்ளைகள் ஆவார். இவர்கள் பெற்றோர் இல்லாமலே மேற்கு ஜேர்மனிக்கு வந்துள்ளனர்.

பெரு நாட்டில் பெரும் மழையும் அதனால் மண்சரிவும் ஏற்பட்டன. 30 பேர்கொல்லப்பட்டனர். 50 பேர்வரை காணாமல் போயுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் வின்னிமண்டேலாவும் அவரது உளவுப்படையும் கறுப்பு இனத்தவர்களுக்கெதிராக துன்புறுத்தல்கள், கொலைகள் செய்ததாக விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

மேற்கு ஜேர்மனியில் எய்ட்ஸ் நோயால் 2,885பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 1,200பேர் இறந்துள்ளனர்.

மேற்கு ஜேர்மனியின் பயேர்ன் பகுதியிலுள்ள தஞ்சம் கோரியவர்கள் இருந்தவிடுதிக்குள் தீக்குண்டுகள் வீசப்பட்டன.

இந்தியாவின் மைசூர்ப்பகுதியில் தொலைக்காட்சிப்படம் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது சினிமாக்கொட்டகைத் தீப்பிடித்து 36பேர் இறந்தனர்.

சூடானில் 60 இலட்சம் மக்கள் பஞ்சத்தால் வாடுகின்றனர். பிள்ளைகள் நூறு வீதம் இறக்கின்றன. உணவில்லாமல் புற்கள், மரவேர்கள், இலைகளை இங்குள்ளவர்கள் உண்கிறார்கள்.

1988 டிசம்பர் மாதத்திலிருந்து 1989 பெப்ரவரி 3ஆம் திகதிவரை தேர்தல் குழப்பங்களினால் 2,179பேர்வரை இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனர். உயிரைக் கொடுத்தாவது பாராளுமன்றத்திற்குப் போக வேண்டுமென்பதே அரசியல்வாதிகளின் நோக்கம். இது ரைம் சஞ்சிகை நிருபரின் குறிப்பு.

ஆர்ஜன்ரீனாவுக்குச் சொந்தமான சரக்குக் கப்பல் ஒன்று தென்துருவத்தில் மூழ்கியது. இக் கப்பலிலிருந்த டீசல் எண்ணெய் 10 மைல் சுற்றளவிற்கு கடலையும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடற்பிராணிகளையும் பாதித்தது.இப் பாதிப்பு 100 வருடங்களிற்கு தொடரும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து டுபாய் ஊடாக பிராங்பேட் விமானநிலையத்தில் வந்திறங்கி தரித்து நின்ற எயர்லங்கா விமானத்திலிருந்து 3 தமிழர்கள் விமான ஓடுபாதையில் குதித்தனர்.ஒருவர் உடனே மரணமானார்.படுகாயங்களுக்குள்ளாகி மோசமான நிலையிலிருந்த ஏனைய இருவரும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.பிரான்ஸ் செல்வதற்கான பிரயாணச்சீட்டு வைத்திருந்த இவர்களிடம் தங்கிச் செல்வதற்கான உரிய விசா இல்லாததால் எயர்லங்கா ஊழியர்கள் இவர்களை பிராங்பேட் விமான நிலையத்தில் இறங்கிச் செல்ல விடாமல் தடுத்ததாகவும்,இந்த விமானம் திரும்ப இலங்கைக்குச் செல்வதால் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதனால் இம் மூவரும் குதித்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.இச் சம்பவத்தின்பின் அந்த விமானத்தில் இறங்கவிடாமல் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஏனைய இலங்கையர்கள் மேற்கு ஜேர்மனிக்குள் அனுமதிக்கப்பட்டனர்.இச் செய்தியை பல பத்திரிகைகள்,வானொலி,தொலைக்காட்சி என்பன இருட்டடிப்புச் செய்திருந்தன.

இந்திய எழுத்தாளரும்,இங்கிலாந்தில் தற்போது வசிப்பவருமான சமன்ரூஷ்டி என்பவர் எழுதிய 'சாத்தானின் வரிகள்' என்ற நாவலை ஈரானியத் தலைவர் தடைசெய்யப்பட்டுள்ள புத்தகமாக அறிவித்துள்ளார்.இந் நாவலை எழுதிய ஆசிரியரைக் கொல்பவருக்கு 30 கோடி டொலர் தரப்படும் என கொமெய்னி அறிவித்துள்ளார்.உலகெங்கிலுமுள்ள முஸ்லீம்கள் இந் நாவலைத் தடைசெய்யக்கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தினர்.இவற்றை பொலிசார் கலைக்கும் நடவடிக்கை எடுத்ததில் 60பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.இந்தியா, பாகிஸ்தான் உட்பட சில நாடுகள் இந் நாவலைத் தடைசெய்துள்ளன.எனினும் மேற்கு நாடுகள் தங்கள் மொழிகளில் இந்நாவலை மொழிபெயர்த்து விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளன.விற்பனை எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.நாவலாசிரியருக்கும்,அவரது குடும்பத்தினருக்கும் இங்கிலாந்துப் பொலிசார் பாதுகாப்பு வழங்குகின்றனர்.புத்தக விற்பனை நிலையங்களில் கொமெய்னியின் கொலைப்படையால் குண்டுகள் வைக்கப்பட்டுள்ளன.







www.tamilarangam.net

# அழுங்கள்

காங்கேசன் கோவிந்குமார்...

அங்கு
மனிதம்
சுகவீனமாகிவிட்டது
வன்முறை
வைத்தியம் பார்த்ததில்.

ஒரு
கருப்பையில்
கருவானவர்கள்
நம்
தேசக்கனுக்களை
கருக்கி மடிகிறார்கள்.

ஒற்றுமை
என்பதை
வேற்றுமை என்று
விளங்கிக் கொண்டார்கள்
இவர்கள்?

ஏதோ
தேடித்தரப்
புறப்பட்ட
இவர்களின்
தேசிய அணிவகுப்பில்
இப்போது
எத்தனை வகுப்புகள்?

நமக்குள்ளேயே
மரணம் வேண்டாம்.
குற்றவாளிகளை
மன்னிப்பு
தண்டிக்கட்டுமே.

வா பாரதி
அன்று
சிங்களத்தீவினிற்கோர் பாலம்
என்றாய்.
இன்று
எமது தோழர்களுக்கே
வேண்டுமென்று
வந்து பாடு.

www.tamilarangam.net

# கேள்வி? பதில்!

தூண்டில் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் தர முனையும்போது முக்கியமான ஒரு முற்குறிப்பு அவசியம் என கருதுகிறேன். ஒரு பொருளியலாளன், சமூகவியலாளன், அல்லது அரசியல் ஆய்வாளர்கள் சமூகப் பிரச்சினையை விளங்கிக் கொள்கின்ற அல்லது அணுகுகின்ற முறையில் ஒரு கலைஞன் அதனை விளங்கிக் கொள்வதில்லை. ஒரு கலைஞனுக்கு எத்தகைய சமூகப் பிரச்சினையும் மனிதம் என்ற அடியிலிருந்து கிளம்பும் பல்வேறு பரிமாணங்களாகத் தெரியும். இவற்றை உணர்வோடு பிணைத்துக் கொள்வதிலேயே கலைஞனின் கலையாக்கத்தின் வெற்றி தங்கியுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் கலைஞன் பிரச்சினைகளோடு உணர்வுபூர்வமாகத் தன்னைப் பிணைத்துக் கொள்பவன். ஒரு அரசியல் ஆய்வாளன் உணர்வு பூர்வமாகத் தன்னைப் பிணைத்துக் கொள்ள மறுப்பவன். அதிஷ்டவசமாகவோ, துரதிஷ்டவசமாகவோ நான் இந்த இரண்டு துருவங்களிலும் மாறி மாறிச் சஞ்சரிக்க வேண்டியவனாக உள்ளேன். உங்களுடைய கேள்விகளுக்கு கலைஞனாக இருந்தும், அரசியல் ஆய்வாளனாக இருந்தும் பதிலளிக்க வேண்டியுள்ளது.

— சேரன்

? இலங்கையிலுள்ள அனைத்துப் பாட்டாளி வர்க்கமும் இணைந்து போராடவேண்டியது அவசியமானால் தமிழ் ஈழம் என்ற பதம் பொருத்தமானதா?

? இரு பெரும் வல்லரசுகளின் தலையீடுமின்றி நாம் தனித்துப் போராட்டம் நடத்த முடியுமா?

பரிஸ் (பிரான்ஸ்) வி. பிரேம்குமார்

! உங்களுடைய முதலாவது கேள்வியில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று இலங்கையிலுள்ள பாட்டாளி வர்க்கங்கள் இணைந்து போராடுவது பற்றியதும், மற்றது இத்தகைய இணைவு அவசியம் எனில் 'தமிழீழம்' என்ற சொல்லின்பொருத்தப்பாடு பற்றியது.

இலங்கையில் பாட்டாளி வர்க்கம் எவ்வளவு தூரம் பலம் வாய்ந்தது என்பது ஒரு பிரதானமான விசயம். 1893இல் நிகழ்ந்த முதலாவது வேலை நிறுத்தத்துடன் ஆரம்பமான தொழிற்சங்க வரலாறு இலங்கையின் பாட்டாளி வர்க்க இருப்பை தெளிவாக உறுதிப்படுத்தி விட்டாலும் இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டாளி வர்க்கம் பொதுவாகவே பலவீனமானதாகவும், கொழும்பை அண்டிய பகுதிகளிலேயே பலமானதாகவும் ஆரம்பம் முதல் இருந்து வந்தது. பிரதானமான பாட்டாளிகளான மலையகத் தேயிலைத் தொழிலாளர்கள் இந்த கொழும்பு சார் பாட்டாளிகளிலிருந்து தனிமைப்பட்டே இருந்தனர். இன்னும் தொழிற்சங்க கால ஆரம்ப காலகட்டத்தில் தமிழ், மலையாள, முஸ்லீம், சிங்களம் எனப் பல்வேறு இனக் குழுக்களைச் சேர்ந்த பாட்டாளிகள் பரவலாக இருந்தமையினால் ஆரம்ப காலத்தில் பாட்டாளி வர்க்க உணர்வு பலம் பொருந்தியதாக இருந்தது என்ற கருத்தை குமாரி ஜயவர்த்தனஎன்ற ஆய்வாளர் முன்வைத்துள்ளார். எனினும் ஆரம்பகாலப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களான ஏ.ஈ.குணசிங்க போன்றவர்கள் 1930 அளவில் சிங்கள இனவாதிகளாக மாறிவிட்டனர். இந்தக் காலப் பகுதியிலேயே மலையாளத் தொழிலாளர்களுக்கெதிரான இனக் கலவரம் நிகழ்ந்தது. இலங்கைப் பாட்டாளி வர்க்கம் என்பது உண்மையில் சிங்களப் பாட்டாளி வர்க்கமாகப் பின்னர் இனம் காணப்பட்டது. பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளான எல்.எஸ் எஸ்.பி, சி.பி போன்றன ஆரம்பத்தில் பாட்டாளி வர்க்க உணர்வை வலியுறுத்தி வந்தபோதும் 1960களில் இவர்களும் சிங்களப் பெருந்தேசிய வாதத்துக்கு ஆட்பட்டுவிட்டனர்.

இந்த வரலாறு இலங்கையைப் பொறுத்தவரை வர்க்க உணர்வைவிட இனத்துவ உணர்வு பலம் பொருந்தியதாக வளர்ந்து விட்ட ஒரு நிலைமையைச் சுட்டுகிறது. இன்று தமிழ், சிங்கள தொழிலாளர்களின் பிரதான அடையாளங் காணுதல் (Identity) வர்க்க உணர்வின் மூலமாக அல்ல.

இனத்துவத்தின் மூலமாகத்தான். பலவீனமான பாட்டாளி வர்க்கமும், சிங்களப் பெருந்தேசியவாதமும் இணைந்ததால் ஏற்பட்ட விளைவே இது. (மேலும் ஆழமான விளக்கத்திற்கு நீங்கள் பின்வரும் நூல்களை வாசிக்கலாம்-

1. இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்-குமாரி ஜயவர்த்தன, குமரன் பதிப்பகம்.
2. இனத்துவமும், சமூக மாற்றமும்- கொழும்பு சமூக விஞ்ஞானிகள் சங்க வெளியீடு)

எனவே இன்றைய நிலையில் தமிழ், சிங்களப் பாட்டாளி வர்க்கம் இணைந்து போராடுவது யதார்த்தமான ஒன்றல்ல என்றே கருதுகிறேன்.

இரண்டாவது தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் பலம் என்ன? நிலை என்ன?. தமிழ்ப் பிரதேசங்களில் பாட்டாளி வர்க்கம் மற்றும் உழவர்கள், கூலி உழைப்பாளர்கள் போன்றவர்கள் பற்றிய சரியான ஆய்வுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. பிரதான செல்வாக்கு மிக்க சக்தியாக இடைநிலை, மத்தியதர வர்க்கமே இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் வர்க்க ரீதியிலான ஒற்றுமை சாத்தியமில்லை. தேசிய ஒடுக்கு முறை உள்ளபோது

வர்க்க ஒற்றுமை சாத்தியப் படாது என ஐரிஷ் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக மார்க்ஸ் எழுதியதை நினைவு கொள்வது இங்கு பொருந்தும்.

அடுத்து தமிழீழம் என்ற பெயரை நான் ஒரு குறியீடாகவே பார்க்கிறேன். இன்றைய இலங்கையின் யதார்த்தம் இரு தேசிய இனங்களும் உணர்வு பூர்வமாகவும், உளவியல் ரீதியாகவும் கணிசமானளவு பூகோள ரீதியாகவும் பிரிந்து விட்டன. இதற்கான பிரதான பொறுப்பு சிங்கள மக்கள், மற்றும் இவர்களது தலைவர்கள், சிங்கள இடதுசாரிகள் அனைவரையுமே சாரும்.

தமிழீழம் என்ற குறியீட்டின் பின்னால் இருப்பது ஒரு தேசிய இனத்தின் நியாயமான சுயநிர்ணய உரிமைக்கான வேட்கையும், உயிர் வாழ்வதற்கான உத்தரவாதமுமேயாகும். இந்த வேட்கையும், உத்தரவாதமும் மிகுந்த நியாயமானவை மட்டும் அல்ல, போராடிப் பெற வேண்டியதுமாகும். தமிழீழம் என்ற பெயர் வேண்டாமென்றால் அல்லது என்று வைத்துவிட்டாலும் எனக்குப் பரவாயில்லை. முக்கியம் நமது மக்களின் தேசியம் மறுக்கப்படக் கூடாதென்பதே.

சிங்கள மக்களின் குறியீடான வாளேந்திய சிங்கம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த முடியுமென்றால், தமிழ் மொழி பேசும் தமிழ், முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய தமிழீழம் என்ற சொல்லில் வெறுப்புக் கொள்வதற்கு பிரதான காரணம் எதுவும் இருக்கப் போவதில்லை.

வல்லரசுகள் பற்றிய இரண்டாவது கேள்வியில் தலையீடு என்பதால் நீங்கள் ஆதரவையும், எதிர்ப்பையும் கருதுவதாகப் புரிந்து கொண்டு மேலே சொல்கிறேன். நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஒரு வகையான பூகோள அரசியலுக்குள் (Geo-Politics) நாமும் பிணைந்து விட்டோம். இன்று உலகம் முழுவதும் ஏதோ ஒரு வகையில் மூலதனம், முதலீடு போன்ற விசயங்களால் பின்னப்பட்டுவிட்டது. இந்தப் பின்னல் மூன்றாம் உலக நாடுகளுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளில் தங்கியிருக்கும் தன்மையை உருவாக்கி விட்டுள்ளது. எனவே முற்று முழுதாக வல்லரசுகளின் தலையீடின்றி போராட்டங்கள் மூன்றாம் உலக நாடுகளில் நிகழ்வது சாத்தியமில்லை. எனினும் போராட்டங்களின் வெற்றி மிகப் பிரதானமாக மக்களையே சார்ந்துள்ளது. மாபெரும் அமெரிக்க வல்லரசுக்கெதிராக வியட்நாம் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்தை வெற்றியாக முடிக்க முடியுமெனின் ஏனைய நாடுகளுக்கும் இது பொருத்தமானதே. மக்களுடைய போராட்டமாக இருக்கும் எந்தப் போராட்டத்தையும் எத்தகைய வல்லரசும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் தள்ளிப் போட முடியும். சர்வதேசச் சூழலையும், அரசியல் காலநிலையை

www.tamilarangam.net

யும், சக்திகளையும் சரியானபடி இனங்கண்டு தீர்க்க தரிசனத்துடன் போராட்டத்தை முன்னெடுக்க முடியுமானால் வெற்றி நிச்சயம்.

எரித்திரிய மக்களின் போராட்டம் எந்த வல்லரசிலும் தங்கியிருக்கவில்லை. இந்தோனேசிய இராணுவ ஆக்கிரமிப்புக் கெதிராக போராடும் கிழக்கு திமோர் மக்கள் எந்த வெளி வல்லரசிலும் தங்கியிருக்கவில்லை. பிலிப்பைன்சின் புதிய மக்கள் இராணுவம் என்.பி.ஏ எந்த நாட்டிலும் தங்கியிருக்கவில்லை. (1982இல் என்.பி.ஏ சிறு ஆயுதங்களை சோவியத் யூனியனிடமிருந்து இரகசியமாகப் பெற்றதாகச் சொல்லப்பட்டாலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை.)

நமது போராட்டத்தின் திசை மாறல் மக்களைச் சார்ந்திருக்காமல், மக்கள் போராட்டமாக மாறாமல் மக்களின் பிரதிநிதிகளாக இளைஞர் குழுக்கள் போராட்டத்தை ஒழுங்கமைத்ததிலேயே நிகழ்ந்தது.

? ஆண்டிலில் உங்களுக்குப் பிடித்த ஆக்கம் எது?

— கடலோடிகள்

! மனிதம் எங்கே என்ற ஆசிரியர் தலையங்கம்.

---



www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

'தீயின் வார்ப்புகள்' என்ற கவிதை பற்றிய அம்பலவன் புவனேந்திரனின் கருத்துக்கான நமது பதில் விமர்சனம்.

தான் கவிதையின் ஒரு வரியிலும் சீதனப் பிரச்சினை பற்றிக்குறிப்பிடவில்லை என்று கவிஞர் கூறியுள்ளார். சீதனப் பிரச்சினை என்ற வரி இடம்பெற்ருல்தான் அது சீதனப் பிரச்சினை பற்றிக் கூறுகிறது என்று அர்த்தமா? அவரே அதை மறுத்தாலும் அக் கவிதையின் அடிநாதம் அதுதான். "எங்களுக்கு வாழ்வு தர யார் வரப் போகிறீர்கள்?" என்று கவிதையில் நாயகி எமது இளைஞர்களைப் பார்த்துக் கேள்வி எழுப்புகிருளே அது ஏன்? நமது இளைஞர்கள் அவர்களுக்கு 'வாழ்வளிக்க' முடியாமல் எது தடுக்கிறது? "வழிகாட்டுவோம் என்று வெளியேறிய நீங்கள் வெளிநாடுகளில் கோழைகளாக.." என்று எந்த வழிகாட்டலைக் குறிப்பிடுகிருர்? எமது இளைஞர்களை நம்புவதை விடுத்து வங்கக் கடலிடம் சரணடைவது ஏன்? நாம் எதிர்பார்க்கும் 'ஏதோ ஒன்றை' அந்தச் சிப்பாய் எதிர்பார்க்கவில்லை. அது எது? வங்கக் கடலிடம் 'கணவன் வரம்' கேட்கிருள் எனில் அந்த ஏதோ ஒன்று அங்கு பிரச்சினையாக இல்லையென்பதாலேயே. இக் கேள்விகளுக்கு விடை காண்போமாயின் அது சீதனம், மற்றும் பிற்போக்குத்தனமான பிரச்சினைகளே எமத். பெண்கள் எமது இளைஞர்களை அடைவதில் தடையாக இருப்பது விளங்கும். இதைத்தான் கவிதையும் கூறி நிற்கிறது.

கவிதையின் சாராம்சம் பிரச்சினையல்ல. தீர்வு சம்பந்தமாகத்தான் பிரச்சினையே எழுகிறது. ஏற்கெனவே ஈழத்தில் நடந்துவிட்ட ஒரு சில சம்பவங்கள் சீதனப் பிரச்சினையால்தான் இடம்பெற்றன என்ருல் (சிப்பாயை அப்பாவாக்கியது) அந் நிகழ்வு தவருனதே. சீதனப் பிரச்சினையை எதிர்த்துப் போராட வேண்டுமே தவிர எதிரியிடம் வரம் கேட்பது தவருனது. அக் கவிதை நிகழ்ந்துவிட்ட தவறை நியாயப்படுத்தி நிற்கிறது. பிரச்சினைக்கு பருபிற்போக்குத்தனமான தீர்வை முன்வைக்கிறது. பிரச்சினையை வெளிப்படுத்தி, நடந்துவிட்ட தவருன நிகழ்வையும் சுட்டிக்காட்டி அதற்கான சரியான வழிகாட்டுதலையும் கவிஞர் காட்டியிருக்க வேண்டும்.

கவிஞர் கற்பு பற்றிக் குறிப்பிடுகையில் ஓரிடத்தில் 'பக்கம் சார்ந்த கற்பு முறை உள்ள சமூக ..' என்று சரியான கருத்தைச் சொல்லிவிட்டு அதற்கு முற்றிலும் மாருக 'உயிரிலும் மேலாக கற்பைப் பாதுகாக்கும் பெண்கள் கற்பை பறிக்கச் சம்மதிக்க மாட்டார்கள்' என்றும் 'அவர்கள் உயிர் வாழும் வரை கற்போடு வாழவே போராடுவார்கள். இதுவே நிதர்சனம்' என்றும் குறிப்பிடுகிருர். முதலில் பக்கம் சார்ந்த கற்பு முறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்று கூறிவிட்டு பின்பு அந்த கைய கற்பைக் காக்க பெண்கள் போராட வேண்டும் என்கிறார். இது குறித்து அவர் ஒரளவு தெளிவுக்கு வர வேண்டுகிறோம்.

'இன்றைய ஈழத்தில் ஆண்கள் தொகை அருகுவதாகவும், அதிலும் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியோர் தொகை இன்னும் சொற்பம்' எனவும் கவிஞர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார். போராட்டத்தை அரசியல் ரீதியாக பார்ப்பதை விடுத்து வெறும் 'கணித' ரீதியில் பார்க்கும் இக்குறையாடு கவிஞர் அடிப்படையில் தெளிவு பெற வேண்டிய அவசியத்தை உயர்த்திக் காட்டுகிறது. அப்போதுதான் இக் கவிதையின் நாயகிகளை ஒடுக்கு முறைகளின் வேர்களை கிள்ள வைத்து அதற்கான சமுதாய அடிப்படையை மாற்றியமைக்கும் உயர்ந்த நோக்கோடு ஒட்டுமொத்த விடுதலைக்கான போராட்டத்தை நோக்கி திசை திருப்பிவிடும் சரியான தீர்வை கவிஞர் கையிலெடுந்த முடியும்.

சுவிஸ் — எஸ். பி. மூர்த்தி

சுவிஸ் — ரவீந்திரன்

தூண்டில் கலம் பதின்மூன்றில் வாசகர் கடிதம் பகுதியில் ப. வி. சிறீரங்கன் என்ற வாசகர் 'சமுதாயத்தில் நிகழும் புரட்சிகளுக்கும், சமூக மாற்றத்திற்கும் காரணம் மனமாற்றம்தான்' என்ற கருத்தை வலியுறுத்தி ஜேம்ஸ்ஆலனும், உபநிஷதமும் கூறியதாக எழுதியுள்ளார்.

சமுதாயத்தில் நிகழும் புரட்சிகளுக்கும், சமூக மாற்றத்திற்கும் காரணம் புறச் சூழ்நிலையின் தாக்கமே. உதாரணமாக இன்று எமது மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஒரு அடிப்படை மாற்றத்திற்காகப் போராட வேண்டும் என்ற உணர்வு தானாகவே உருவானதா? இன்று மூன்றும் வகுப்பில் படிக்கும் சிறுவனை எமது போராட்டம் ஏன் ஆரம்பமானது என்று கேட்டால் இலங்கையரசின் அடக்குமுறையானது எமது இயக்கங்களுக்கு தமிழீழம் ஒன்றிற்காகப் போராட வேண்டும் என்ற உணர்வை தோற்றுவித்தது என்ற பொருள்முதல்வாத தத்துவத்தையே கூறுவான். நாங்கள் ஜேர்மனிக்கு வந்தது மனமாற்றத்தினால் அல்ல. புறச் சூழ்நிலையின் தாக்கமே.

வர்க்கங்கள் உள்ள சமுதாயம் நீடிக்கும்வரை வர்க்கப் போராட்டம் நீடிக்கும். 'மனிதாபிமானம், மனிதம், அமைதி, சமாதானம்' என்பன வர்க்கங்களற்ற கம்யூனிஸ சமுதாயத்தில் மட்டுமே ஏற்பட முடியும். சுரண்டுபவனும், சுரண்டப்படுபவனும், ஒடுக்குபவனும், ஒடுக்கப்படுபவனும் இருக்கும் வரை இவை வெறும் வார்த்தைகளே.

இதே கருத்தை தூண்டிலும் விளக்கமின்றி, பொறுப்பற் போக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிலே, எந்த ஒரு விடையேனும் அளிக்காமல் பிரசுரிக்குமாக இருந்தால் அது ஆசிரியர் குழுவின் முதுகெலும்பற்ற தன்மையையே குறித்து நிற்கிறது.

பிருக்கல் — அரியராசா

ஸ்ரைன்கைம் — வி. நடராஜன்

சுவிஸ் — அகிலன்

வாசகர் கடிதங்களில் இடம்பெறும் கருத்துகள் அனைத்தும் எமது கருத்தாகாது. அவை வாசகர்களின் சுதந்திரமான கருத்துகளே. ஒரு ஆக்கத்தை வாசகர் விமர்சிக்கும்போது அவ்வாக்கத்திற்கான ஆக்கதாரர் பதிலளிப்பதே பொருத்தமானது. எனினும் ஆசிரியர் குழு என்ற ரீதியில் பிரசுரமாகும் ஆக்கங்கள் பற்றியும், வாசகர் கடிதங்களிலுள்ள கருத்துகளைப் பற்றியும் எமது கருத்தைத் தெரிவிப்பதற்காக 'நமது விமர்சனம்' என்ற பகுதியை கலம் பதினான்கிலிருந்து ஆரம்பித்துள்ளோம். இதனை முன்கூட்டியே ஆரம்பிக்காதது எமது தவறேயாகும்.

தமிழ் மக்கள் இலங்கையரசின் ஒடுக்கு முறைக்கு உள்ளானோர்கள். இங்கு வாழ்நிலையானது (ஒடுக்குமுறை) போராட வேண்டும் என்ற சிந்தனையைத்தூண்டுகிறது. இங்கு சிந்தனையை வாழ்நிலை, புறநிலைதான் தீர்மானிக்கின்றனவே தவிர சிந்தனை வாழ்நிலையைத்தீர்மானிக்கவில்லை என்ற வாசகர் அகிலனின் கருத்தே நமது கருத்துமாகும்.

— கடலோடிகள்

தூண்டிலில் வரும் ஒவ்வொரு கட்டுரையும் மக்களின் சுய எண்ணங்களைத்தூண்டுகின்றன. ஆனால் வெளியிடப்படும் கட்ரைகள் முதலாளித்துவத்திற்கும், மாக்சிசத்திற்கும் ஆதரவாக மாறி மாறி உள்ளன. அதனால் உங்கள் போக்கு என்ன என்பது எமக்கு கேள்விக் குறியாகவே உள்ளது. நீங்கள் சார்ந்திருக்கும் தென்னாசிய நிறுவனம் முதலாளித்துவக் கும்பலுக்கு பச்சைக் கொடி காட்டும் சமாதான விரும்பி. அவர்களுடன் சேர்ந்து எங்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எப்படி?

கவிதை எழுதும் நண்பர்களுக்கு மனப்பூர்வமான வாழ்த்துகள். இப்போதைய நிலைக்கேற்றவாறு கவிதைகளை எழுதுகிறார்கள். மதங்களைப் பற்றி சரியாக அறியாதவர்கள் செய்வதை தயவு செய்து மதவெறி என்று குறிப்பிட வேண்டாம். சிலர் தமது சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இன்று மதங்களையும், மொழிகளையும், தங்களையும் விபச்சாரம், வியாபாரம் செய்கிறார்கள். இவர்களைப் பொறுத்தமட்டில் மதம் விளையாட்டுப் பொருள். எங்களைப் பொறுத்தவரை நல்ல வழிகாட்டல்.

நூறன்பேர்க் — வி. எம். குலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரைகளும் ,வாசகர் கடிதங்களும் ஒன்றல்ல.எமக்குத் தெரிந்தவரை மக்களின் நலனை விரும்பும் ஆக்கங்கள் மட்டுமே பிரசுரிக்கப்படுகின்றன. ஆனால் வாசகர் கடிதம் பகுதியில் வாசகர்களின் கருத்துக்கு சுதந்திரமளிக்கப்படுகிறது.எங்கள் போக்கை கலம் பன்னிரண்டில் விளக்கியுள்ளோம்.தென்னாசிய நிறுவனத்துடன் இணைந்துதான் எங்கள் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமென நாம் ஒருபோதும் கருதவில்லை.மதத்தைப் பற்றிய உங்கள் கருத்திற்கான பதில் கலம் பதினொன்றில் வெளியான பாரதி என்பவரின் கட்டுரையில் உள்ளது.

— கடலோடிகள்

தூண்டிலை தூண்டிலில் போட்டு சுவைத்திருந்தேன்.முடிந்தால் கவனத்திற்கு எடுத்து நல்ல,சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து வெளியிடவும்.

நூறன்பேர்க் ஏ.பரமசிவம்

---

பிழை திருத்தம்

கலம் பதினொன்றில் 'வாசகர் கடிதம்' பகுதியில் பிரசுரமான காளிதாஸ் என்ற வாசகரின் கடிதத்தில் தட்டெழுத்தாக்கத்தின்போது சில தவறுகள் ஏற்பட்டுவிட்டன.இரண்டாவது பந்தியில் நான்காவது வரியில் 'சர்வாதிகாரத்தை' என்பது 'சமுதாயத்தை' என்றும், அதே பந்தியில் பதின்மூன்றாவது வரியில் 'ஸ்தானங்கள்' என்பது 'ஸ்தாபனங்கள்' என்றும் பிரசுரமாகியிருக்க வேண்டும்.தவறுக்கு வருந்துகிறோம்.

—கடலோடிகள்.


---

ஓரளவுக்கு ஒரே கருத்தைக்கொண்ட பல வாசகர் கடிதங்கள் கிடைப்பின் அவை ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, அக் கடிதங்களை எழுதிய அனைவரினதும் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவு மிதித்தவள்

- பார்த்திபன்

ஞானம் அதிகாலை பத்து மணிக்கே எழுந்துவிட்டான். காலைக் கடன்களை முடித்து, உத்தியோக பூர்வ ஆடைகளை அணிந்து, ரீ போட்டு, படுக்கையில் இன்னுமிருந்த முத்துவுக்கும் கொடுத்து, தானும் குடித்தான்.

"என்னடாய்பா விடிய வெள்ளன வெளிக்கிட்டு நிக்கிறாய்?" போர்வையிலிருந்து முழுக்க விடுபடாமல் சாமர்த்தியமாக ரீ குடித்துக்கொண்டிருந்த முத்து கேட்டான்.

"சாப்பாட்டுச் சாமான்கள் ஒண்டும் இல்லை. இண்டைக்கு அவனும் வாறனெண்டவன். அதுதான் கடை பூட்டக்கு முதல் ஏதேன் வேண்டுவமெண்டு வெளிக்கிடுறன்"

"கூர்க்கனும், தக்காளிப்பழமும் வேண்டியா. சலாட்டில ஒருபூகம்பம் எழுப்பிக் காட்டுறன்"

"முதல் கட்டிலை விட்டெழும்பு. பழைய பியர்ப் போத்தில்களை குடுத்திட்டு அஞ்சாறு போத்தல் வேண்டிக் கொண்டு வா"

"அதுதான பாத்தன் எங்க மறந்து போனியோவெண்டு" முத்து மிகுதித் தேநீரைப் பருக, ஞானம் கதவைப் பூட்டிக் கொண்டு கீழே இறங்கினான். இவன் வெளிக் கதவைத் திறக்க, முதலாம் மாடியிலிருந்து வந்த கணேசனும் இணைந்து கொண்டான்.

தொடர்கதை 39



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன இண்டைக்கு வேளைக்கு வெளிக்கிட்டாச்சு?"

"சாமான் வேண்ட வேணும். அதோட குலேக்கமும் ஒருத்தன் வாறவெண்டவன்"

இருவரும் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தார்கள். சாடையான தூற்றல் ஆரம்பமாகியிருந்தது. குளிர்நிலை அநேகமாக பச்சியமாயிருக்க வேண்டும். பஸ் தரிப்பில் ஒரு வயோதிப மாது மட்டும் குடை விரித்திருந்தாள்.

"ஆரார் வாறது?" கணேசன் புதினம் தெரியும் ஆவலில்விசாரித்தான்.

"பாத்திபனென்டு முந்தி என்னோட ஒண்டா படிச்சவன்"

"ஆர் உந்தக் கதையள் எழுதுறவரோ?"

"அவனேதான்"

கணேசனுக்குள் திடீர் இரசாயன மாற்றங்கள் நிகழ்ந்தன. முகமும் இலேசாக இறுகியது. "ஆள் வந்த உடன சொல்லு நான் கொஞ்சம் கதைக்க வேணும்"

"அதுக்கென்ன வந்து கதையன்"

பஸ் வந்தது. இருவரும் ஏறிக் கொண்டார்கள். பஸ் விரைந்தது.

வெளியே தூறல் ஓரளவுக்கு மொத்தமாகியிருந்தது. வானத்தில் கருமேகங்கள் நிதானமாக நகர்ந்துகொண்டிருந்தன. விமானம் ஒன்று அரசியல்வாதிகளுக்கு வேலை கொடுப்பதற்காகத் தாழ்வாகப் பறந்தது.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் கணேசனிலிருந்து ஞானம் பிரிந்து கடைகளுக்கு அவசரமாகப் போனான். இறைச்சி, மரக்கறி, தகர வகைகள் என்று வாங்கி இரண்டு பைகளை கனமாக்கிக் கொண்டு கடையிலிருந்துவெளியேறியபோது நேரம் சுமாராகப் போயிருந்தது.

இத்தனை மணிக்கு புகையிரத நிலையத்துக்கு வருவதாக விடிய அவனுக்கு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. அந்த நேரத்திற்கு பத்து நிமிடங்கள் முன்னதாகவே ஞானம் புகையிரத நிலையத்திற்கு வந்துவிட்டான்.

அங்கிருந்த வாங்கொன்றில் தாறுமாறாக அமர்ந்திருந்த இருவர் கையில் பியர் போத்தல்களுடன் டொச்சில் இலக்கணம் கலக்காமல் கதைத்துக் கொண்டிருந்தார்கள். பிறகு கட்டிப் பிடித்தார்கள்.

ஞானம் அவர்களைத்தாண்டி மேலே புகையிரத மேடைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தான். மழைத் தூறல்கள் அவ்வப்போது வந்து மோதின. பலர் புகையிரதத்திற்காகக் காத்திருந்தார்கள். மூச்சுவிலிருந்து மூச்சு விட்டுக்கொண்டு வந்த இன்ரர்சிற்றி ஒன்று அந்தப் புகையிரதநிலையத்தைப் புறக்கணித்து விரைந்தது.

நண்பனுக்காக காத்து நிற்கையில் ஞானத்துக்கு ஏனோ பாடசாலை ஞாபகம் வந்தது. அரைக் காற்சட்டை போட்டுக்கொண்டு போளை விளையாடியதும், சைக்கிளில் ஒரே நேரத்தில் மூவரை ஏற்றி விளையாட்டுக் காட்டி விழுந்து உருண்டதும், வகுப்பில் குளப்படி செய்து ஆசிரியரால் மேசைமேல் ஏற்றப்பட்டு மற்ற மாணவர்களுக்குச் சிரிப்புக் காட்டியதும் இப்போது துக்கத்தை உண்டாக்கின.

'சே என்ன மாதிரி சீவிச்சம். இப்ப ...? ஒன்டுமே இல்லை. மனுசரை மனுசரா மதிக்காத சீவியம். கண்டவனெல்லாம் எங்களைப்பாத்து கறுப்பனே என்டு காறித் துப்ப லெவலா ஜீன்சும், புல்லோவரும் அடிச்சுக் கொண்டு திரியிறம். ஒரு பிரயோசனமும் இல்லாம கிடந்து சீரழியிறம். சிகரட்டும் பத்தி, தண்ணியும் அடிச்சு ...' ஞானத்தின் சிந்தனைகளை கலைத்துக் கொண்டு புகையிரதம் வந்து நின்றது.

அடைபட்டிருந்தவர்கள் அவசரமாக கொட்டுண்டார்கள். சிலர் தங்களுக்காகக் காத்திருந்தவர்களைத் தேடி, அடையாளம் கண்டு, தாவி அணைத்துக் கொண்டார்கள்.

'றெம்போ'வால் மூக்கைத் துடைத்தபடி இறங்கிய பார்த்திபனை ஞானம் கண்டு கொண்டான். புன்னகைத்தான்.

"ஒரு மாதிரி வந்து சேந்திட்டாய்"

"குளிருது. உங்கட பில்டிங் தூரமோ?" பார்த்திபன் அவனை நெருங்கிக் கேட்டான்.

"பஸ்ஸில இருபது நிமிசம் போகவேணும். பாரமாக் கிடக்கு. ஒரு பாக்கைக் கொண்டு வா" என்று ஞானம் ஒரு பையை நீட்ட, பார்த்திபன் வாங்கிக் கொண்டான். இருவரும் புகையிரத நிலையத்தைவிட்டு வெளியில் வந்தார்கள்.

மழை இன்னும் நிற்கவில்லை. பாதையில் ஓரளவுக்கு நீர் இருந்தது. மழையில் நனையும் பாதசாரிகளில் அக்கறைப்படாத சமிக்ஞை விளக்கு சிவப்பாகவே எரிந்தது.

"எப்பிடி இருக்கிறாய்? அன்டைக்கு வடிவா கதைக்கேலாமப் போச்சு"

"அதே மாதிரித்தான்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உன்னைச் சந்திப்பன் என்டு நான் நினைக்கவேயில்லை. தற்சேலா சந்திச்சிட்டம்"

"நானும்தான்."

பச்சை எரிய, பாதையைக் கடந்து, அடுத்த நடைபாதையில் நடந்தார்கள்.

"எங்களோட படிச்ச வேற ஆரேன் இஞ்ச கிட்டடியில இருக்கினமே?"

"செல்வம் பக்கத்து ஸ்ரட்டிலதான் இருந்தவன். இப்ப கனடாவில"

"பள்ளிக்கூட ஞாபகந்தான் வருகுது" என்று பார்த்திபன்சொல்ல அதேதான் எனக்கும் என்பது போல் ஞானம் மௌனமாயிருந்தான்.

பஸ் நிலையத்தில் பஸ் புறப்பட ஆயத்தமாக இருக்க இருவரும் ஏறிக்கொண்டார்கள். இறங்கும்வரை பழைய கதையெல்லாம் கதைத்துக்கொண்டிருந்தார்கள். சிலவற்றுக்கு சிரித்தார்கள். அவ்வப்போது மௌனமானார்கள்.

இருவரும் கட்டிடத்திற்கு வந்தபோது கட்டிடம் உயிர்த்திருந்தது. அன்றாட அலுவல்கள் ஆயத்தமாகியிருந்தன. திறந்திருந்த ஜன்னல்களினூல் சமையலறை புகைவிட்டுக் கொண்டிருந்தது. பாடல்கள் பாடின. முத்து உடைமாற்றி அறையையும் துப்பரவாக்கியிருந்தான்.

"இவன்தான் கூட்டாளி" என்று ஞானம் சுருக்கமாக அறிமுகப்படுத்த பார்த்திபனும், முத்துவும் சிநேகமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

"நான் நினைச்சன் கதையெழுதுறபடியா வடிவாயிருப்பியளெண்டு" என்று முத்து சொல்ல, ஒல்லியாக, கறுப்பாக இருந்த பார்த்திபன் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டான்.

"உவன் உப்பிடித்தான். ஒண்டுக்கும் யோசியாதை. உதில இரு. சமையலை முடிச்சுப்போட்டு வாறம். பியர் அடிக்கிறனியெண்டா கட்டிலக்கு கீழ கிடக்கு. எடுத்து அடி" என்று ஞானமும், தொடர்ந்து முத்துவும் சமையறைக்குப் போய்விட, பார்த்திபன் அறைக்குள் தனித்தான். அறையைப் பார்த்தான்.

ஒன்றன் மேல் ஒன்றாகப் போடப்பட்ட இரண்டு கட்டில்களும், ஒரு தனிக்கட்டிலும், இரண்டு அலுமாரிகளும், ஒரு மேசையும் போதுமான இடத்தைப் பிடித்திருந்தன. மேசையில் கிடக்கும் புத்தகங்களைப் பார்த்தான். திரைச் சித்திராவில் நடிகையொருத்தி உடையைத் தாராளமாக அகற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிருக்தபக்கத்தில் குமுதம், ஆனந்தவிகடனுடன் கலைவிளக்கு, தூண்டில், நமது குரல் என்பன வித்தியாசப்பட்டன. ஒன்றை எடுத்து விரித்தான்.

"ஆள் வந்திட்டுதே?" என்று கேட்டுக்கொண்டே கணேசன் வந்தான்.

"அறைக்கை" ஞானம் சொல்லிவிட்டு கறிப்பவுடரைத் தூவினான்.

அறைக்குள் வந்த கணேசன் "நீரேன் ஆக்களைக் காட்டிக்குடுக்கிறீர்?" என்று எடுத்தவுடன் கேட்டான்.

(இன்னும் வரும்)

---



சிறுகதையில் தீர்வு சொல்லப்படாத சம்பவம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

'கரைநாட்டாப் பயணங்கள்' என்ற கவிதையில் ஏமாற்றத்திலான ஏக்கமே வெளிக்காட்டப்பட்டுள்ளது.

'கேள்வி-பதிலில்' சேரன் பதிலளித்திருப்பதுபோல கொழும்பிலும், அண்டிய பகுதிகளிலுமே ஆரம்பத்தில் பாட்டாளிவர்க்கம் பலமானதாக இருந்தாலும் ஏனைய பகுதிகளிலுள்ள பாட்டாளிகளும் பலம் வாய்ந்தவர்களே. இனவாதத்தினால் இவர்களது உணர்வு திசை திருப்பப்பட்டிருப்பதனாலேயே பலவீனமான தோற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையே நீடிக்குமானால் தமிழ், சிங்களப் பாட்டாளி வர்க்கம் இணைவது யதார்த்தமானதொன்றல்லதான். எனவே பாட்டாளி வர்க்கத்திற்கு அவர்களின் பலத்தைப் புரிய வைத்து, விடிவுக்கான சரியான வழியைத் தெரியப்படுத்துதல் அவசியமாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

மார்ச் 1989 கலம் : 15

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு.......... கடலோடிகள்

வெளியீடு............. தென்னாசிய நிறுவனம்

முகவரி.................. SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL 2
WEST GERMANY.
TEL. 0202 · 507156

பெயர், முகவரி போன்ற முழு விபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது. நீங்கள் விரும்பினால் நீங்கள் குறிப்பிடும் புனை பெயரிலோ, இடத்தைக் குறிப்பிடாமலோ பிரசுரிக்கப்படும். வாசகர் வட்டம் போன்ற அமைப்புகளிலிருந்து அனுப்பும்போது அந்த அமைப்புகளின் சார்பாக ஒருவரின் பெயராவது குறிப்பிடல் வேண்டும்.

விமர்சனங்களை இயலுமானளவு விரைவில் அனுப்புதல் விரும்பத்தக்கது. விமர்சனங்கள் நீளமாக இருப்பின் கருத்துச் சிதையாமல் அவற்றை ஓரளவுக்குச் சுருக்கிப் பிரசுரிக்கும் உரிமையை ஆசிரியர் குழு வாசகர்களின் அனுமதியுடன் எடுத்துக்கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL · 2
WEST GERMANY.